RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 125 | மே.11, 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## போர் பதற்றம் காரணமாக சென்னையில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

## காவல் ஆணையர் அருண் தகவல்

சென்னை: மே.11-

போர் பதற்றம் காரணமாக சென்னையில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக காவல் ஆணையர் அருண் தெரிவித்தார்.

புதிதாக தேர்வு செய்யப்பட்டு பயிற்சி முடித்த 514 ஊர்க்காவல் படையினர் சென்னை பெருநகர காவல்துறையுடன் இணைக்கும் நிகழ்ச்சி எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நேற்று நடந்தது. இந்த நிகழ்ச்சியில் காவல் ஆணையர் அருண் கலந்து கொண்டார். அவருக்கு ஊர்க்காவல் படை சார்பில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

சென்னை காவல்துறையில் இருந்து ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்கள் பிரிக்கப்பட்ட போது, 750 ஊர்க்காவல் படையினர் 2 காவல் ஆணையரகத்துக்கும் கொடுக்கப்பட்டது. அதனால் 3080ஆக இருந்த ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. கடந்த ஆண்டு தமிழக அரசுக்கு கடிதம் எழுதியதன் அடிப்படையில், ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கையை அதிகரித்து, 500 புதிய பணி யிடங்கள் உருவாக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, ஊர்க்காவல் படையினருக்கு தேர்வு நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு 2 மாதம் காலம் பயிற்சி வழங்கப்பட்டது. கடந்த காலங்களில் ஊர்க்காவல் படையினரின் அழைப்பு பணிக்கான ஊதியம் சரியாக வழங்கப்படாமல் 4 அல்லது 5 மாதங்களுக்கு தொகுத்து வழங்கி வந்தனர். அந்த நடைமுறை மாற்றி தற்போது ஒவ்வொரு மாதமும் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

போர் பதற்றம் காரணமாக மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரித்துள்ளோம். அதேபோல் கண்காணிப்பை அதிகாரித்து இருக்கிறோம். எந்தெந்த இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டுமோ, அந்த இடங்களில் உளவுத்துறை மற்றும் காவல்துறையும் இணைந்து கண்காணிப்பு பணி மேற்கொண்டு வருகிறது.

மேலும் திரையரங்கம், வணிக வளாகங்கள், கோயில்கள், கடற்கரை என அனைத்து இடங்களிலும் பாதுகாப்பை அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை முழுவதுமே வாகன சோதனையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை. அவர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஜிப்மர் ஊழியர்களின் விடுமுறை ரத்து: மே 13க்குள் அனைவரும் பணியில் இணைய உத்தரவு

புதுச்சேரி: மே.11-

நாட்டில் நிலவி வரும் போர்ப் பதற்றம் காரணமாக ஜிப்மர் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட பொது விடுமுறை மற்றும் கோடை விடுமுறைகள் உடனடியாக ரத்து செய்யப்பட்டுள்ளது. மறு உத்தரவு வரும் வரை விடுமுறை எடுக்கக் கூடாது எனவும், 13ம் தேதிக்குள் அனைத்து ஊழியர்களும் பணியில் சேருமாறும் ஜிப்மர் நிர்வாகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

புதுச்சேரி ஜிப்மர் மூத்த நிர்வாக அதிகாரி ஹவா சிங் அனைத்து துறைகளுக்கும் பிறப்பித்த உத்தரவின் விவரம்: "நாட்டில் நிலவி வரும் போர் சூழல் காரணமாக உருவாகி வரும் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு, தயார் நிலையில் இருக்க வேண்டும். அத்தியாவசிய சேவைகளின் தொடர்ச்சியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகிறது.



கடுமையான மருத்துவ அல்லது அவசர கால சூழ்நிலைகளைத் தவிர, மறு உத்தரவு வரும் வரை எந்த விடுப்பும் அனுமதிக்கப்படாது. முன்னர் அனுமதிக்கப்பட்ட அனைத்து விடுமுறைகளும் உடனடியாக ரத்து செய்யப்படுகின்றன. அனைத்து ஊழியர்களும் உடனடியாக பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அனைத்து ஊழியர்களும் வரும் 13ம் தேதிக்குள் பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கோடை விடுமுறையின் முதல் பாதி நாட்கள் உடன் அமலுக்கு வரும் வகையில் குறைக்கப்படுகிறது. அனைத்து ஜிப்மர் மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களும் வரும் 13ம் தேதிக்கு முன்பாக பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். வரும் மே 17ம் தேதி தொடங்க திட்டமிடப்பட்ட கோடை விடுமுறையின் இரண்டாம் பாதி ரத்து செய்யப்படுகிறது. தற்போதைய அவசர நிலையின்போது முழுமையான செயல்பாட்டுத் தயார் நிலை மற்றும் தடையற்ற சேவை வழங்கலை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் எங்கும் பணியமர்த்தப்படுவர்: இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக அறிவுறுத்தல்களின்படி, தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஜிப்மர் நிறுவனத்தின் அனைத்து மருத்துவ மற்றும் துணை மருத்துவ ஊழியர்களும் இந்தியாவில் எங்கும் பணியமர்த்தப்படுவார்கள். அதன்படி, சம்பந்தப்பட்ட அனைத்து ஊழியர்களும் உடனடி பணியமர்த்தலுக்குத் தயாராக இருக்க வேண்டும். முழு ஒத்துழைப்பும் தர வேண்டும்," என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "திராவிட மாடலின் வெர்சன் 2.0 இனிதான் தொடங்கப்போகிறது" முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

திருச்சி: மே.11-

சரிவில் இருந்த தமிழகத்தை மீட்டு நம்பர்1 மாநிலமாக்கி சாதனை படைத்துள்ளோம். இது வெறும் தொடக்கம்தான், திராவிட மாடல் ஆட்சியின் வெர்சன் 2.0 இனி சிங்கப் பாதையாக இருக்கும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

திருச்சி பஞ்சப்பூரில் ரூ.408 கோடியில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கருணாநிதி பேருந்து முனையத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். தொடர்ந்து, ரூ.1,032.15 கோடி மதிப்பிலான 7,122 முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்து, ரூ.527.63 கோடி மதிப்பிலான 3,597 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய முதல்வர் ஸ்டாலின், ரூ.856 கோடியில் 1,17,132 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தற்போது திறக்கப்பட்டுள்ள பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம், குளிரூட்டப்பட்ட வசதியுடன் விமான நிலையத்துக்கு நிகராக அமைக்கப்பட்டுள்ளது. திருச்சியில் ரூ.408 கோடியில் புதிய பேருந்து முனையம், ரூ.128 கோடியில் அண்ணா சரக்கு வாகன முனையம், ரூ.236 கோடியில் பெரியார் காய்கறி அங்காடி, ரூ.290 கோடியில் காமராஜர் பெயரில் நூலகம், ரூ.150 கோடியில் ஒலிம்பிக் அகாடமி, ரூ.18.9 கோடியில் பறவைகள் பூங்கா என திட்டங்கள் அணிவகுக்கின்றன.

இதுதவி, மணப்பாறை சிப்காட்,



டைடல் பூங்கா, ஜல்லிக்கட்டு அரங்கம் என திருச்சி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.26 ஆயிரம் கோடியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 9.69 சதவீத பொருளாதார வளர்ச்சி என்பது, இதுவரை தமிழகம் காணாத வளர்ச்சியாகும்.

எல்லாருக்குமான ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது. வருங்காலங்களில் இதைவிட பெரிய சாதனைகள் படைப்போம். இதைத்தான் நமது எதிரிகளால் தாங்க முடியவில்லை. கடந்த அதிமுக ஆட்சியில் 3 வேளாண் சட்டங்களுக்கு ஆதரவு, சிஏஏ சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததுடன், ஜிஎஸ்டி வரிவிதிப்புக்கும் தலையாட்டினார்கள். தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு, சாத்தான்குளம் சம்பவம் என பொதுமக்களை கொன்று குவித்தனர்.

அப்படிப்பட்ட இருண்ட ஆட்சியில் இருந்து நான்கே ஆண்டுகளில் நம்முடைய விடியல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இதுவெறும் தொடக்கம்தான். திராவிட மாடலின் வெர்சன் 2.0 இனிதான் தொடங்கப்போகிறது. நாங்கள் 4 ஆண்டுகளில் சரிவில் இருந்து மீட்டு, நம்பர் 1 மாநிலமாக்கி சாதனை படைத்தோம். இனி நாம் போகின்ற பாதை சிங்கப் பாதையாக இருக்கும், ராக்கெட் வேக வளர்ச்சியை வரும் காலத்தில் பார்ப்பீர்கள். இவ்வாறு அவர் பேசினார்.

ராணுவ வீரர்களுக்கு மரியாதை: விழாவில், பஹல்ஹாம் தீவிரவாத தாக்குதல் மற்றும் பாகிஸ்தான் ராணுவ குண்டு வீச்சில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், இந்திய ராணுவத்தினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து நின்று வீர வணக்கம் செலுத்தினர்.

முன்னதாக, பஞ்சப்பூரில் ரூ.236 கோடியில் 22 ஏக்கர் பரப்பில் கட்டப்பட உள்ள இருக்கும் பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டிய முதல்வர் ஸ்டாலின், அதன் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் சிலையை திறந்து வைத்தார். இதேபோல, அதேபகுதியில் ரூ.128.94 கோடியில் கட்டப்பட்டுள்ள அண்ணா கனரக சரக்கு வாகன முனையம், அங்கு அமைக்கப்பட்டுள்ள அண்ணா சிலை ஆகியவற்றையும் முதல்வர் திறந்து வைத்தார்.

விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ரகுபதி, சிவசங்கர், சிவ.வீ.மெய்யநாதன், மேயர் மு.அன்பழகன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ராயப்பேட்டையில் ரூ.12.37 கோடியில் பல்நோக்கு மையம்: திட்டப் பணிகளை துணை முதல்வர் தொடங்கி வைத்தார்

சென்னை: மே.11-

சென்னை ராயப்பேட்டையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய திருமணக் கூடத்துடன் ரூ.12.37 கோடியில் புதிய பல்நோக்கு மையம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான திட்டப்பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.



வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதியில் ரூ.15.61 கோடி மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம், 2 புதிய முதல்வர் படைப்பகங்கள் மற்றும் நூலகங்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அதன்படி ரூ.12.37 கோடி மதிப்பீட்டில் 15,408 சதுர அடி கட்டிட பரப்பளவில், தரைத்தளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய புதிய பல்நோக்கு மையம் சென்னை ராயப்பேட்டை பைகிராஃப்ட் சாலையில் அமைக்கப்பட உள்ளது.

இந்த பல்நோக்கு மையத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய 224 இருக்கைகள் கொண்ட திருமணக்கூடம், உணவருந்தும் இடம், தங்கும் அறைகள், வாகன நிறுத்துமிடம், லிப்ட் வசதிகள் உள்ளிட்டவை இடம்பெறும். திருவல்லிக்கேணி ஜானி பாட்ஷா தெருவில் உள்ள பொது நூலகத்தை மேம்படுத்தும் விதமாக ரூ.1.87 கோடி செலவில் 4,273 சதுர அடியில் தரைத்தளம் மற்றும் 2 தளங்களுடன் கூடிய புதிய முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன பொது நூலகம் அமைக்கப்பட உள்ளது.

அதேபோல் திருவல்லிக்கேணி பாரதி சாலையில் உள்ள பொது நூலகத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.1.37 கோடியில் 2,420 சதுர அடியில் தரைத்தளம் மற்றும் 2 தளங்களுடன் கூடிய புதிய முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன பொது நூலகம் அமைக்கப்பட இருக்கிறது. சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதியில் நடைபெற உள்ள 3 புதிய திட்டப்பணிகளை அடிக்கல் நாட்டி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சேப்பாக்கம் சைடோஜி தெரு மற்றும் டி.பி.கோயில் தெருவில் உள்ள திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ.3.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணியாளர் குடியிருப்புகளையும், ரூ.1.87 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட பணியாளர்களுக்கான 12 குடியிருப்புகளையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து, வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை பயனாளிகளிடம் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்பி, மேயர் பிரியா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் சு.பிரபாகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திருநெல்வேலி கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை தொடங்கியது



நெல்லை, மே.11-

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை தொடங்கியது. மாவட்ட பேரிடர் மேலாண்மை குழு தலைவரான ஆட்சியர் சுகுமார் தலைமையில் போர் சூழல் ஒத்திகை நடக்கிறது. அணுமின் நிலைய பாதுகாப்பு, அவசர கால செயல்முறைகள் குறித்து ஒத்திகை நடைபெற்று வருகிறது

## சென்னை, வேலூரில் நடந்த அமலாக்க துறை சோதனையில் ரூ.4.73 கோடி பறிமுதல்

சென்னை: மே.11-

சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாக சென்னை, வேலூரில் நடந்த சோதனையில் ரூ.4.73 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.



இதுகுறித்து அமலாக்கத் துறை கூறியிருப்பதாவது: முன்னாள் சுற்றுச்சுழல் துறை கண்காணிப்பாளர் எஸ்.பாண்டியனுக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத் துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின்பேரில், சென்னை, வேலூரில், தமிழ்நாடு அரசு துறைகளுடன் தொடர்புடைய கன்சல்டன்சி நிறுவனங்கள், ஆலோசகர்களுக்கு (கன்சல்டன்ட்) சொந்தமான 16 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது.


அந்தவகையில், முக்கிய ஆலோசகர்களான (கன்சல்டன்ட்) பிரபாகர் சிகாமணி, ஏ.கே.நாதன், நவீன்குமார், சந்தோஷ்குமார், வினோத்குமார் ஆகியோர் சட்டவிரோதமாக அனுமதியை பெற்றுக் கொடுத்ததில் முக்கியப் பங்கு வகித்துள்ளனர். சோதனையில் இவர்களிடம் இருந்து கணக்கில் வராத ரூ.4.73 கோடி ரொக்கம், டிஜிட்டல் பதிவுகள், சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், குற்றச்செயல்களின் மூலம் பெறப்பட்ட சொத்துகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை முடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மாநகர பேருந்து ஓட்டுநர், நடத்துநர்கள் மே 11,12 தேதிகளில் விடுப்பு எடுக்க தடை

சென்னை: மே.11-

வரும் 11,12 தேதிகளில் மாநகர பேருந்து ஓட்டுநர், நடத்துநர்கள் விடுப்பு எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநகர போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறியதாவது: வரும் 11, 12 தேதிகளில் முகூர்த்தநாள் மற்றும் பவுர்ணமி ஆகியன வருவதால் மாநகர போக்குவரத்துக் கழக ஊழியர்கள் அனைவரும் பணிக்கு வர



அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்களில் யாரும் விடுப்பு எடுக்கக் கூடாது என சம்பந்தப்பட்ட பொறுப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே விடுப்பு பெற்றிருந்தவர்கள் கூட மண்டல மேலாளர் அளவில் விடுப்பு எடுக்க மீண்டும் அனுமதி பெற வேண்டும் எனவும், பொதுமக்கள் நலன் கருதி அனைவரும் பணிக்கு வந்து ஒத்துழைப்பு வழங்கும்படி நிர்வாகம் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

சிறுபாசனக் கண்மாய்கள் புத்துயிர் ஊட்டுதல் திட்டம் 2024-25ன் கீழ் 11 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.3,430.84 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 442 கண்மாய்கள் புனரமைக்கப்பட்டு வரும் பணிகள் குறித்து

# திருப்பத்தூர், சிவகங்கை மற்றும் மானாமதுரை ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் இரா.கஜலட்சுமி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் அவர்களுடன் களஆய்வு



சிவகங்கை, மே.11-

சிவகங்கை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் திருமதி இரா. கஜலட்சுமி இ.ஆ.ப., அவர்கள், இன்றையதினம் (09.05.2025) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், சிறுபாசனக் கண்மாய்கள் புத்துயிர் ஊட்டுதல் திட்டம் 202425ன் கீழ் நடைபெற்று வரும் கண்மாய்கள் புனரமைக்கும் பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்களுடன், கள ஆய்வுகள் மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டமும் மேற்கொண்டார்.

சிவகங்கை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் அவர்கள் கள ஆய்வு மற்றும் கலந்தாய்வு கூட்டம் மேற்கொண்டு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் நீர்வள ஆதாரங்களை சீரமைத்து, நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தி, நீர்நிலைகளை பாதுகாத்திட துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையில், சிவகங்கை மாவட்டமானது சிற்றாறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் அதிகம் நிறைந்த மாவட்டமாக திகழ்ந்து வருகிறது. அவ்வாறுள்ள நீர்நிலைகளின் வாயிலாக மழைக்காலங்களில் பெறப்படும் தண்ணீரை வீணாக்காமல் சேமிப்பதற்கு ஏதுவாக, வரத்துவாய்கால், கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகளை புணரமைத்தல், பலப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் கலுங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைந்திருக்கும் செடிகளை அகற்றுதல், நீர்நிலைகளில் உள்ள சீமைக்கருவேல் மரங்களை அகற்றுதல் போன்ற பல்வேறுப் பணிகள் தொடர்ந்து மாவட்ட முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் 442 சிறுபாசன கண்மாய்கள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் 58 கண்மாய்களுக்கு ரூ.379.54 இலட்சம் மதிப்பீட்டிலும், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் 80 கண்மாய்களுக்கு ரூ.787.32 இலட்சம் மதிப்பீட்டிலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் 23 கண்மாய்களுக்கு ரூ.179.90 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் 30 கண்மாய்களுக்கு ரூ.277.69 இலட்சம் மதிப்பீட்டிலும், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 25 கண்மாய்களுக்கு ரூ.236.53 இலட்சம் மதிப்பீட்டிலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 39 கண்மாய்களுக்கு ரூ.172.53 இலட்சம் மதிப்பீட்டிலும், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 40 கண்மாய்களுக்கு ரூ.435.82 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் 45 கண்மாய்களுக்கு ரூ.470.77 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 35 கண்மாய்களுக்கு ரூ.187.52 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தில் 40 கண்மாய்களுக்கு ரூ.210.34 இலட்சம் மதிப்பீட்டிலும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 27 கண்மாய்களுக்கு ரூ.92.88 இலட்சம் மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் சிவகங்கை மாவட்டத்தில் 442 கண்மாய்களுக்கு ரூ.3,430.84 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாசன கண்மாய்கள் புனரமை க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக மேற்கொள்ள ப்பட்டு வரும் பணிகளில், இன்றையதினம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் கோட்டையிருப்பு ஊராட்சிக்குட்பட்ட பூசாரியேந்தல் கண்மாயில் ரூ.03.20 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆலம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ஆலம்பட்டி கிராமப் பகுதியிலுள்ள மண்டியேந்தல் கண்மாயில் ரூ.08.34 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒழுகமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட ஒவலிப்பட்டி கிராமப் பகுதியிலுள்ள தட்டாங்குண்டு கண்மாயில் ரூ.04.71 இலட்சம் மதிப்பீட்டிலும், அதே பகுதியிலுள்ள செங்குண்டு கண்மாயில் ரூ.03.44 இலட்சம் மதிப்பீட்டிலும், காட்டாம்பூர் ஊராட்சிக்குட்பட்ட மருதன் கண்மாயில் ரூ.04.00 இலட்சம் மதிப்பீட்டிலும், இ.அம்மாபட்டி ஊராட்சிக்குட்பட்ட சின்னகொசவன் கண்மாயில் ரூ.03.00 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியம் ஆலங்குளம் ஊராட்சிக்குட்பட்ட கிழவெள்ளஞ்சி கண்மாயில் ரூ.08.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மாங்குடி தெற்குவாடி ஊராட்சிக்குட்பட்ட தெற்குவாடி கண்மாயில் ரூ.06.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் கல்குறிச்சி ஊராட்சிக் குட்பட்ட தீத்தான்குளம் கண்மாயில் ரூ.07.27 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மாய் தூர்வாருதல் மற்றும் கரை பலப்படுத்துதல் பணிகள் குறித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், சிறுபாசன கண்மாய்கள் புனரமைக்கும் பணிகளை மழைக்காலங்களுக்கு முன்பாகவே முடித்திட சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது என சிவகங்கை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் திருமதி இரா.கஜலட்சுமி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து இக்கூட் டத்தில், அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் தங்களது பகுதிகளிலுள்ள சிறுபாசனக் கண்மாய்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகள் குறித்து, புள்ளி விவரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திரு.ரெங்கநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.ரமேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வி கீர்த்தனா மணி மற்றும் மாநகராட்சி / நகராட்சி ஆணையாளர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## 2030க்குள் சூரியசக்தி மின்னுற்பத்தி 50,000 மெகாவாட் அளவை எட்ட இலக்கு: மின்வாரியம்

சென்னை, மே.11-

"வரும் 2030ம் ஆண்டுக்குள் சூரியசக்தி மின்னுற்பத்தி 50 ஆயிரம் மெகாவாட் அளவை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள், "சுற்றுச்சூழலைப் பாதிக்காத காற்றாலை, சூரியசக்தி ஆகியவற்றை உள்ளடக்கிய பசுமை எரிசக்தியை பயன்படுத்துமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. இதன்படி, தமிழக அரசு பசுமை எரிசக்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, சூரியசக்தி மின்னுற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்போது சூரியசக்தி மின்னுற்பத்தி நிறுவுதிறன் 10 ஆயிரம் மெகாவாட்டாக உள்ளது.

எனினும், 12 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு நிறுவுதிறன் அமைப்பதற்கான போதிய இடவசதி உள்ளது. ஒரு மெகாவாட் சூரியசக்தி மின்னுற்பத்தி நிலையம் அமைக்க குறைந்தபட்சம் 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மேலும், காற்றாலை மின்னுற்பத்தி செய்வதற்கு, காற்றாலை சீசன் ஒருசில மாதங்கள் மட்டுமே நிலவுவதால், அதை விட சூரியசக்தி மின்னுற்பத்தி ஓராண்டில் அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன், சூரியசக்தி மின்னுற்பத்திக்கான செலவு குறைவாக இருப்பதோடு, சுற்றுச்சூலை பாதிக்காத வகையிலும் உள்ளது. எனவே, சூரியசக்தி மின்னுற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, வரும் 2030ம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் மெகாவாட் சூரியசக்தி மின்னுற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

அதேபோல், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பேட்டரி மூலம் சேமித்து வைப்பதற்கான பேட்டரி ஸ்டோரேஜ் வசதியையும் ஏற்படுத்தப்பட்ட உள்ளது. முதற்கட்டமாக, 4 ஆயிரம் மெகாவாட் சூரியசக்தி மின்சாரத்தை பேட்டரி மூலம் சேமித்து வைப்பதற்கான ஸ்டோரேஜ் வசதி ஏற்படுத்தப்படும்." என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



## கேரளாவில் தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்குகிறது: வானிலை ஆய்வு மையம்

புதுடெல்லி, மே.11-

கேரளாவில் தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட (ஜூன் 1) நான்கு நாட்களுக்கு முன்னதாக மே 27ம் தேதியில் தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

வானிலை ஆய்வு மையத்தின் எதிர்பார்ப்புப்படி, வரும் மே 27ம் தேதி பருவமழை தொடங்கினால், கடந்த 2009ம் ஆண்டு மே 23ம் தேதி பருமழை தொடங்கியதற்கு பின்பு, இந்தியாவின் முக்கியமான நிலப்பரப்பில், முன்கூட்டியே பருவமழை தொடங்குவது இதுவாகத்தான் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் முதன்மையான பருவமழை வழக்கமாக ஜூன் 1ம் தேதி கேரளாவை வந்தடையும்.

இந்திய வானிலை ஆய்வு மையம், கடந்த 2023ம் ஆண்டில் பருவமழை சராசரியாக, 96 சதவீதமாக இருக்கும் என்று கணித்திருந்தது. என்றாலும் உண்மையில் அந்த ஆண்டு சராசரி அளவை விட குறைவாக 94 % மழையே பதிவாகியிருந்தது. எல் நினோவினால் அந்த ஆண்டு பருவமழை நீண்டகால சராசரி அளவான 868.6 மி.மீ. அளவை விட குறைவாக 820 மி.மீ. மட்டுமே பதிவாகியிருந்தது. 2023ம் ஆண்டுக்கு முன்பாக தொடர்ந்து நான்கு ஆண்டுகள் இந்தியா சரசாரி மற்றும் சராசரிக்கும் கூடுதலான மழையை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு (2024) நீண்ட கால சராசரியை விட கூடுதலாக 108 சதவீதம் மழை பதிவாகி இருந்தது.

இந்தியாவின் மழைப் பொழிவில் 70 சதவீதம் பருவமழையால் மட்டுமே கிடைக்கிறது. பருவமழை என்பது இந்தியப் பொருளாதாரத்துக்கான உயிர்நாடியாகும். இந்தியாவின் விவசாயப்பரப்பில் 51 சதவீதம், அதாவது உற்பத்தியில் 40 சதவீதம் பருவமழையை நம்பியே உள்ளது. 47 சதவீதம் மக்கள் தங்களின் வாழ்வாதாரத்துக்காக விவசாயத்தையே நம்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## அதிகாலையில் பாய்ந்த பாக். ட்ரோன்களை தாக்கி அழித்த இந்திய ராணுவம் வீடியோ பதிவு வெளியீடு

புதுடெல்லி, மே.11-

எல்லை பகுதிகளில் பாகிஸ்தானின் தொடர் தாக்குதல் முயற்சிகளை முறியடிக்கப்படும் என இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியாகி உள்ள எக்ஸ் தள பதிவில் வீடியோ ஒன்றையும் ராணுவம் பகிர்ந்துள்ளது.

அதில், 'தேசத்தின் மேற்கு எல்லை பகுதியில் ட்ரோன் மற்றும் வெடிகுண்டுகளை கொண்டு பாகிஸ்தான் தொடர் தாக்குதலில் ஈடுபட்டது. இந்த தாக்குதல் சம்பவத்தில் ஒன்றாக இன்று (மே 10) காலை 5 மணி அளவில் அமிர்தசரஸில் உள்ள ஒரு பகுதியில் பாகிஸ்தானின் ட்ரோன்கள் அடையாளம் காணப்பட்டன. அதை நமது வான் பாதுகாப்பு அமைப்பின் மூலம் நமது பாதுகாப்பு படையினர் வானில் இடைமறித்து அழித்தனர்.

இந்தியாவின் இறையாண்மையை மீறும், நாட்டு மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலான பாகிஸ்தானின் இந்தச் செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது. பாகிஸ்தானின் தாக்குதல் முயற்சி மற்றும் அது சார்ந்த திட்டங்களை ராணுவம் முறியடிக்கும்' என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

விமான நிலையங்கள் மூடல்: இதனிடையே, எல்லையில் பதற்றம் உச்சத்தை தொட்டுள்ள நிலையில், இந்தியாவில் உள்ள 32 விமான நிலையங்களில் உள்நாட்டு விமான சேவைகள் மே 14 வரை நிறுத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதம்பூர், அம்பாலா, அமிர்தசரஸ், அவந்திபூர், பதிண்டா, பூஜ், பிகானேர், சண்டிகர், ஹல்வாரா, ஹிண்டன், ஜெய்சல்மேர், ஜம்மு, ஜாம்நகர், ஜோத்பூர், காண்ட்லா, காங்க்ரா (ககல்), கேஷோத், கிஷன்கர், குலு மணாலி (பூந்தர்), லெஹ், லூதியானா, லே, லூதியானா, பத்ரா, லூதியானா, போர்பந்தர், ராஜ்கோட் (ஹிராசர்), சர்சாவா, சிம்லா, ஸ்ரீநகர், தோ யிஸ் மற்றும் உத்தரலை உள்ளிட்ட விமான நிலையங்களில் உள் நாட்டு விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது என மத்திய அரசு உத்தர விட்டுள்ளது.

## கன்னியாகுமரியில் மே 13ம் தேதி பிரதம அமைச்சரின் தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்

கன்னியாகுமரி, மே.11-

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் மண்டல திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் இயக்குநரகம் ; (RDSDE) சார்பாக நாகர்கோவில், கோணத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் வைத்து மே 13ம் தேதி செவ்வாய்கிழமை காலை 9 மணி முதல் பிரதம அமைச்சரின் தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் (Pradhan Mantri National Apprenticeship Mela) PMNAM நடைபெற உள்ளது.

மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில்; நிறுவனங்கள் பங்கேற்கும் இந்த முகாமில் ஐ.டி.ஐ தேர்ச்சிப் பெற்று தற்போது வரை தொழிற்பழகுநர் பயிற்சி பெறாத பயிற்சியாளர்களும், தொழிற்பயிற்சி முடித்த பயிற்சியாளர்களுக்கு தொழிற்பழகுநர் சட்டம் 1961ன் கீழ் தொழிற்பழகுநர் பயிற்சி வழங்க விரும்பும் தொழில் நிறுவனங்களும் கலந்து கொள்ளலாம்.

இதில் பங்கேற்று தேர்வு பெறும் ஒரு வருட தொழில் பிரிவுகளில் தொழிற்பயிற்சியினை நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கு குறைந்தபட்சம் 7700 மற்றும் இரு வருட தொழில் பிரிவுகளில் தொழிற்பயிற்சியினை நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கு 8050 தொழிற்பழகுநர் பயிற்சி காலத்தில் உதவித் தொகையாக வழங்கப்படும். தொழிற்பழகுநர் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் தொழிற்பழகுநர்களுக்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்ற தேசிய தொழிற்பழகுநர் சான்று வழங்கப்படும். இச்சான்று பெற்றவர்கள் பொதுத்துறை மற்றும் பெரிய தொழில் நிறுவன வேலைவாய்ப்புகளில், ஐ.டி.ஐ. முடித்து தேசிய தொழிற்சான்று பெற்றவரை விட முன்னுரிமை பெற்றவராக கருதப்படுவர்.

தொழிற்பழகுநர் சட்டம் 1961ன் படி குறைந்தபட்சம் 30 பணியாளர்களுடன் இயங்கும் அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் தொழிற்பழகுநர் இணையதளத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்து தொழிற்பழகுநர் திட்டத்தினை செயல்படுத்துவது கட்டாயம் என்பதால், அரசின் சட்ட நடவடிக்கைகளை தவிர்க்கும் வகையில் மேற்படி குறைந்த பட்ச பணியாளர்களுடன் இயங்கும் தொழில் நிறுவனங்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி தொழிற்பழகுநர் திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

ஐ.டி.ஐ.யில் சேர்ந்து பயிற்சி பெற முடியாத 8, 10, 12ம் வகுப்பு பட்டய மற்றும் பட்டப்படிப்பு முடித்தவர்கள் நேரடியாக தொழிற்சாலைகளில் புதிய பழகுனராக சேர்ந்து 3 முதல் 6 மாத கால அடிப்படை பயிற்சியும், ஓராண்டு முதல் 2 ஆண்டுகள் வரை தொழிற்பழகுனர் பயிற்சி பெற்று தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெறலாம்.குறைந்தபட்சம் 4 முதல் 29 பணியாளர்களுடன் இயங்கும் தொழில் நிறுவனங்கள் தங்கள் முழு விருப்பத்தின் பேரில் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

இத்திட்டத்தில் இணைவதன் மூலம் திறன் வாய்ந்த மனிதவளம் தொழில் நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெறுவதுடன், ஒரு தொழிற்பழகுநருக்கு வழங்கப்படும் மாதாந்திர ஊக்கத்தொகையில் 25மு தொகை அல்லது அதிகபட்சமாக 1500 வீதம் அனைத்து தொழில் பழகுநர்களுக்கான ஊக்கத்தொகை கணக்கிடப்பட்டு ஒன்றிய அரசால் சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மீள வழங்கப்படும்.எனவே ITI முடித்த பயிற்சியாளர்கள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தொழில் நிறுவனங்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திட தங்கள் விவரங்களை https://www.apprenticeshipindia.gov.in/login இணையதளம் மூலம் பதிவு செய்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலும் விவரங்களுக்கு நாகர்கோவில், கோணம், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் இயங்கும் மாவட்ட திறன்;பயிற்சி அலுவலகத்தினை நேரிலோ அல்லது 04652 264463 9443579558 என்ற தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## எல்லையில் நடந்த தாக்குதலில் ஆந்திராவைச் சேர்ந்த இளம் ராணுவ வீரர் வீரமரணம்

காஷ்மீர் எல்லையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஆந்திராவை சேர்ந்த இளம் ராணுவ வீரர் வீரமரணம் அடைந்துள்ளார். இவரது மரணத்துக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு இரங்கல் தெரிவித்துள்ளார். ஜம்முகாஷ்மீரில் உள்ள இந்திய பாகிஸ்தான் எல்லையில் நேற்று முன்தினம் இரவு, இரு நாட்டு ராணுவ வீரர்களும் பயங்கர தாக்குதலில் ஈடுபட்டனர்.

சுமார் 1 மணி நேரத்துக்கும் மேலாக நடந்த இந்த தாக்குதலில் ஆந்திர மாநிலம், ஸ்ரீ சத்ய சாய் மாவட்டம், கல்லிதாண்டா பகுதியை சேர்ந்த முரளிநாயக்(25) எனும் இளம் ராணுவ வீரர், வீர மரணம் அடைந்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அதிகாலை



அவரது குடும்பத்தாருக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதனை அறிந்து அவரது குடும்பத்தார் அதிர்ச்சி அடைந்ததோடு கதறி அழுதனர். இவரது தந்தை எம். ஸ்ரீராம், தாயார் ஜோதிபாய் ஆகியோர் மும்பையில் ஒரு கட்டுமான தொழில் நிறுவனத்தில் தினக்கூலி தொழிலாளர்களாக பணியாற்றி வருகின்றனர். முரளி நாயக் கடந்த ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகைக்கு 15 நாட்கள் விடுமுறை எடுத்து வீட்டுக்கு கடைசியாக வந்துள்ளார்.

இளம் ராணுவ வீரர் முரளிநாயக்கின் உடல் இன்று அவரது சொந்த கிராமத்துக்குக் கொண்டு வரப்பட உள்ளது. அரசு மரியாதையுடன் இறுதி சடங்குகள் நடத்தப்பட உள்ளது. தகவல் அறிந்ததும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தொலைபேசி மூலம் முரளி நாயக்கின் பெற்றோரை தொடர்பு கொண்டு, ஆறுதல் கூறினார்.

ஆந்திர அரசு சார்பில் குடும்பத்துக்கு நல திட்ட உதவிகளை செய்வதாக வாக்குறுதி அளித்தார். மேலும் ஆந்திர அரசு சார்பில் ரூ.5 லட்சத்துக்கான காசோலையை நேற்று அமைச்சர் சவீதா, முரளி நாயக்கின் வீட்டுக்கு சென்று அவரது பெற்றோரை சந்தித்து வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கூடங்குளம் அணுமின் நிலையம், திருநெல்வேலி மாவட்டம், வடசென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை

சென்னை, மே.11-

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனையின்படி, கூடங்குளம் அணுமின் நிலையம், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம், அலகு 2. அத்திப்பட்டு ஆகிய இடங்களில் பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை நடத்தப்பட்டது. இந்த ஒத்திகையின் போது விமான தாக்குதலை எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலை குறித்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஒத்திகை போது பாதுகாப்பு, வெளியேற்றம் மற்றும் முதலுதவி மேற்கொள்ளப்பட்டது.

தொடர்பான பயிற்சியும் மாநில அவசரகால செயல்பாட்டு மையம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையம். கூடங்குளம் அணுமின் நிலையம், மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம் ஆகியவற்றில் உள்ள கட்டுப்பாட்டு அறைகள் மூலம் பயிற்சிகள் கண்காணிப்பட்டது. மாவட்ட அதிகாரிகள், மாநில அதிரடிப்படை, ஊர்க்காவல் படையினர். தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை. மற்றும் மருத்துவக்குழுக்கள் இந்த மாதிரிப் பயிற்சியில் பங்கேற்றனர்.

இதன் தொடர்ச்சியாக, நாளை 10.05.2025 அன்று சிவில் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஒத்திகை. வ. ஊ. சிதம்பரனார் துறைமுக ஆணையம், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம், தூத்துக்குடி மாவட்டம் ஆகிய இடங்களில் மாலை 04.00 மணியளவில் நடக்க உள்ளது. இந்த பயிற்சியின் போது எதிரிகளின் தாக்குதல் மற்றும் எவ்விதமான அவசரக்கால சூழலையும் எதிர்கொள்வதற்கான ஆயத்த நிலை பரிசோதிக்கப்படும். இந்த சிவில் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய இடங்களில் ஆயத்த நிலையினை சரிபார்த்துக் கொள்வதற்கான ஒரு ஒத்திகை மட்டுமே ஆகும். மற்ற இடங்களில் உள்ள அனைத்து செயல்பாடுகளும் வழக்கம் போல இயங்கும். இப்பயிற்சி குறித்து பொதுமக்கள் எவ்வித பதற்றமோ அல்லது அச்சமோ கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் மேலசொக்கநாதபுரம் ஒன்றியத்தில் தமிழக வெற்றி கழகம் போடி மேற்கு ஒன்றியம் சார்பில் பொதுமக்களுக்காக போடி தேவாரம் மெயின் ரோடு அருகே நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி .பிரகாஷ் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தலைமையிலும், ஜெயபிரகாஷ் ஒன்றிய செயலாளர், பிரபாகரன் இணைச் செயலாளர், மதிவாணன் ஒன்றிய பொருளாளர், முருகேசன் மேலசொக்கநாதபுரம் பேரூர் செயலாளர், செல்வகுமார் பேரூர்இணைச்செயலாளர், பேரூர் பொருளாளர் அரவிந்த், பேரூர் ஒன்றிய துணைச் செயலாளர் பாண்டித்துரை,பாலமுருகன்,முத்துலட்சுமி,கனகராஜ் பாலமுருகன் மற்றும் வார்டு செயலாளர்கள் தமிழக வெற்றிக்கழகம் கட்சி நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்

# மாணவர்களுக்கு வழங்க 4.19 கோடி பாடநூல்கள் பள்ளிகளுக்கு அனுப்பும் பணிகள் தீவிரம்

சென்னை, மே.11-

1 முதல் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்குவதற்காக 4.19 கோடி பாடநூல்கள் அச்சிடப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



தமிழக பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 44 ஆயிரத்துக்கும் அதிகமான அரசு மற்றும் நிதியுதவி பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1 முதல் 12ம் வகுப்பு வரை சுமார் 70 லட்சம் மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இவர்களுக்கான பாடநூல்கள் அச்சிடும் பணியை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேற்கொண்டு வருகிறது. அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளின் மாணவர்களுக்கு இலவசமாகவும், தனியார் பள்ளிகளுக்கு குறைந்த விலையிலும் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

அதன்படி வரும் 2025 26ம் கல்வியாண்டுக்காக மொத்தம் 4.19 கோடி பாடநூல்கள் முழுமையாக அச்சிடப்பட்டுள்ளன. அதாவது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு வழங்குவதற்காக 2.72 கோடி புத்தகங்கள், விற்பனைக்காக 1.47 கோடி புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு, அந்தந்த மாவட்ட கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அங்கிருந்து பள்ளிகளுக்கு விநியோகம் செய்யும் பணிகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் சென்னை மாவட்ட பள்ளிகளுக்கு வழங்குவதற்காக சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள கல்யாணம் மேல்நிலைப் பள்ளியில் வைக்கப்பட்டுள்ள பாடபுத்தகங்களை பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் புகழேந்தி ஆகியோர் இன்று (மே 9) நேரில் ஆய்வு செய்தனர். இந்த பாடநூல்கள் அடுத்த வாரத்துக்குள் பள்ளிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன. இதுகுறித்து பள்ளிக்கல்வித் துறை சிலர் கூறும்போது, "கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் ஜூன் 2ம் தேதி திறக்கப்பட உள்ளன. முதல் நாளிலேயே 1 முதல் 7ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலாம் பருவ பாடப்புத்தகங்களும், 8 முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு முழு ஆண்டுக்கான புத்தகங்களும் வழங்கப்படும். அதற்கேற்ப தயார் நிலையில் இருக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர தனியார் பள்ளி மாணவர்களுக்கான பாடநூல்கள் விற்பனை கடந்த ஏப்ரல் 28ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. சென்னையில் நுங்கம்பாக்கம் டிபிஐ வளாகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், அடையாறு பாடநூல் விற்பனை கிடங்கு ஆகியவற்றில் புத்தகங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலும், தமிழ்நாடு காதிக நிறுவனத் தின் மூலம் தயாரிக்கப்பட்ட நோட்டுப் புத்தகங்களும் முழுமையாக பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது" என்றனர்.



# 24 மணி நேரமும் கடைகள் மற்றும் நிறுவனங்கள் திறந்திருக்க அனுமதி நீட்டிப்பு: அரசாணை வெளியீடு

சென்னை, மே.11-

பொதுமக்களின் நலன் கருதி, 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை பணியமர்த்தியுள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் அனுமதி அளிக்கப்பட்டு, ஜூன் 5ம் தேதி முதல் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து, தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர், மே 6ம் தேதி அன்று 42வது வணிகர் தினத்தையொட்டி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் மதுராந்தகத்தில் நடைபெற்ற மாநாட்டில், "பொதுமக்களின் நலன் கருதி கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அனைத்து நாட்களும் 24 மணி நேரமும் திறந்திருக்க அனுமதி அளித்து வழங்கப்பட்ட அரசாணை, வரும் ஜூன் 4ம் தேதியுடன் முடிவடைவதால் இதனை மேலும், 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து அரசாணை வெளியிடப்படும்" என அறிவித்தார்.

தமிழக முதல்வரின் அறிவிப்பிற்கிணங்க, பொதுமக்களின் நலன் கருதி, 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை பணியமர்த்தியுள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் அனுமதி அளிக்கப்பட்டு, ஜூன் 5ம் தேதி முதல் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால், அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வணிகர்களும், பொதுமக்களும் பயனடைவார்கள், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிளஸ்2 துணைத்தேர்வுக்கு வரும் 14ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம்: தேர்வுத்துறை அறிவிப்பு

சென்னை, மே.11-

பிளஸ் 2 தேர்வில் தோல்வி அடைந்த மாணவ மாணவியர், வராதவர்கள், பிளஸ் 1 வகுப்பில் நிலுவைப் பாடங்கள் வைத்திருப்பவர்கள் என தனித் தேர்வர்கள் 14ம் தேதி முதல் துணைத் தேர்வு எழுத விண்ணப்பிக்கலாம் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் நடந்த பிளஸ் 2 தேர்வுக்கான முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது துணைத் தேர்வு ஜூன், ஜூலை மாதங்களில் நடத்த தேர்வுத்துறை திட்டமிட்டுள்ளது.

பிளஸ் 2 தேர்வில் தோல்வி அடைந்தவர்கள், பிளஸ் 1 வகுப்பு தேர்வில் நிலுவை வைத்திருப்போர், தேர்வுக்கு வராத பள்ளி மாணவர்கள் மீண்டும் தேர்வு எழுத வசதியாக துணைத் தேர்வு நடத்தப்படுகிறது. இந்த தேர்வில் பங்கேற்க மேற்கண்ட மாணவ மாணவியர் 14ம் தேதி முதல் 29ம் தேதி வரை அவர்கள் படித்த பள்ளிகளுக்கு நேரில் சென்று காலை 11 மணி முதல் மாலை 5 மணிவரையில் விண்ணப்பிக்க வேண்டும்.

பள்ளி மாணவர்கள் தவிர தனித் தேர்வர்கள் 14ம் தேதி மதல் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டள்ள சேவை மையங்கள் மூலம் துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இந்நிலையில், 14ம் தேதி முதல் 29ம் தேதிகளில் துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கத் தவறும் மாணவ மாணவியர சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் உரிய கட்டணத் தொகயுடன் மே 30 மற்றும் 31ம் தேதிகளில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

சிறப்பு அனுமதிக் கட்டணம் ரூ.1000 செலுத்த வேண்டும். இந்த கட்டணம் 20242025ம் கல்வி ஆண்டில் அரசு மற்றும் முழுமையாக அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெறாத, வருகைபுரியாத மாணவர்களு க்கு மட்டும் இந்த கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க விரும்புவோர் சேவை மையங்களின் விவரங்கள், ஆன்லைன் விண்ணப்பங்கள் பதிவு செய்தல் தொடர்பான அறிவுரைகள் அனைத்தும் www.dge.tn.gov.in என்ற இணைய தளத்தில் அறிந்து கொள்ளலாம். மேலும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம். பிளஸ்1, பிளஸ் 2 வகுப்புகளுக்கான துணைத் தேர்வுக்குரிய தேர்வு அட்டவணையை மேற்கண்ட இணைய தளத்தில் இருந்தே தெரிந்து கொள்ளலாம்.



# ஆபரேஷன் சிந்தூர்: பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனை

புதுடெல்லி, மே.11-

இந்தியா பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், நாட்டின் பாதுகாப்பு தொடர்பான உயர்மட்ட ஆலோசனையில் பிரதமர் நரேந்திர மோடி ஈடுபட்டார்.

பிரதமர் மோடியின் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்புப் படைத் தலைவர், முப்படைகளின் தளபதிகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 26 இடங்கள் மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதற்கு பதிலளிக்கும் விதமாக இன்று (சனிக்கிழமை) அதிகாலை பாகிஸ்தானில் உள்ள நான்கு விமானப்படைத் தளங்களில் இந்தியா தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானின் சியால்கோட் மாவட்டம் லூனியில் உள்ள பயங்கரவாத ஏவுதளத்தை ஜம்மு எல்லைப் பாதுகாப்புப் படையினர் அழித்தனர்.

மேலும், பஞ்சாபில் உள்ள பாகிஸ்தானின் சர்கோதா விமானப்படை தளத்தின் மீது இந்தியா ஒரு சக்திவாய்ந்த பதிலடி தாக்குதலை நடத்தியது. மேலும், இந்திய விமானப் படை நடத்திய தாக்குதலில், ரஹிம் யார் கான் விமானநிலையம் முற்றாக சேதமடைந்தது.

அதோடு, இந்திய ராணுவம் பயங்கரவாத ஏவுதளங்களை தகர்த்துள்ளது. இது தொடர்பாக இந்திய ராணுவத்தின் ஏடிஜி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாபின் பல நகரங்களில் 2025 மே 08 மற்றும் 09 அன்று இரவு பாகிஸ்தான் நடத்திய ட்ரோன் தாக்குதல் முயற்சிகளுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, இந்திய ராணுவம் பயங்கரவாத ஏவுதளங்கள் மீது ஒருங்கிணைந்த தாக்குதலை நடத்தி அவற்றைத் தூள் தூளாக்கி, தகர்த்தெறிந்தது.

கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் அமைந்துள்ள இந்த பயங்கரவாத ஏவுதளங்கள், கடந்த காலங்களில் இந்திய மக்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் எதிராக பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கான மையங்களாக இருந்தன. இந்திய ராணுவத்தின் விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கை, பயங்கரவாத உள்கட்டமைப்பு மற்றும் திறன்களுக்கு குறிப்பிடத்தக்க அடியைக் கொடுத்துள்ளது." எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய ஆயுதப் படைகள் எடுத்துள்ள பதில் நடவடிக்கைகள் தொடர்பாகவும், நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாகவும் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை மேற் கொண்டார்.

# 'பாக். ராணுவ, ரேடார் தளங்கள், ஆயுதக் கிடங்குகள் சேதப்படுத்தப்பட்டன' கர்னல் சோபியா குரேஷி

புதுடெல்லி, மே.11-

பாகிஸ்தான் ஆயுதப் படைகளுக்கு பதிலளிக்கும் விதமாக அந்நாட்டின் ராணுவ தளங்கள், ரேடார் தளங்கள், ஆயுதக் கிடங்குகளை இந்திய ராணுவம் தாக்கியதாகவும், இதன்மூலம், குறைந்தபட்ச இழப்புகளை உறுதி செய்ததாகவும் கர்னல் சோபியா குரேஷி தெரிவித்துள்ளார்.

இந்தியாபாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு புதுடெல்லியில் இன்று (மே 10) நடைபெற்றது. இதில், வழக்கம்போல் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் பங்கேற்றனர்.

விக்ரம் மிஸ்ரியைத் தொடர்ந்து பேசிய கர்னல் சோபியா குரேஷி, "பாகிஸ்தான் ராணுவம் எல்லையோரப் பகுதிகளில் கண்டிக்கத்தக்க மற்றும் தொழில்முறையற்ற தாக்குதல்களை நடத்தியது. ஸ்ரீநகர், அவந்திபூர் மற்றும் உதம்பூர் விமான தளங்களில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் பள்ளி வளாகங்களை பாகிஸ்தான் குறிவைத்தது. இது மீண்டும் ஒருமுறை அவர்களின் பொறு ப்பற்ற போக்கை வெளிப்படுத்தியது. பஞ்சாபில் பாகிஸ்தான் அதிவேக ஏவுகணையை ஏவியது

பாகிஸ்தான் வேண்டுமென்றே விமானப்படை தளங்களை குறிவைத்தது. இதற்கு பதில் அளிக்கும் விதமாக, இந்திய ஆயுதப் படைகள் விரைவான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட பதில் நடவடிக்கையை எடுத்து பாகிஸ்தானின் தொழில்நுட்ப நிறுவனங்கள், கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள், ரேடார் தளங்கள் மற்றும் ஆயுதக் கிடங்குகளை குறிவைத்தன.



ரஃபிகி, முரித், சக்லாலா, ரஹீம் யார் கான், சுக்கூர் மற்றும் சுனியன் ஆகிய இடங்களில் உள்ள பாகிஸ்தான் ராணுவ தளங்கள் வான்வழி ஏவுதல், துல்லிய வெடிமருந்துகள் மற்றும் போர் விமானங்கள் மூலம் குறிவைக்கப்பட்டன. பஸ்ரூரில் உள்ள ரேடார் தளம் மற்றும் சியால் கோட்டில் உள்ள விமான தளமும் துல்லியமான வெடிமருந்துகளால் குறிவைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் மூலம் இந்தியா குறைந்தபட்ச இணை சேதம் மற்றும் இழப்புகளை உறுதி செய்தது. மேற்கு பகுதியில், பாகிஸ்தானின் ஆக்ரோஷமான நிலைப்பாடு தொடர்ந்தது. அது இந்திய ராணுவத்தை குறிவைக்க முயன்றது. ஸ்ரீநகரிலிருந்து சாலியா வரை 26 இடங்களில் பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. உதம்பூர், ஆதம்பூர், பதான்கோட் மற்றும் பதிண்டாவில் உள்ள விமானப்படை தளங்களில் சேதம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீநகர், அவந்திபூர் மற்றும் உதம்பூரில் உள்ள ராணுவ மருத்துவமனைகளை பாகிஸ்தான் குறிவைத்தது.

பாகிஸ்தான் ராணுவம் எல்லைப் பகுதிகளுக்கு தங்கள் படைகளை நகர்த்துவதை இந்திய ராணுவம் கண்டறிந்தது. மேற்கு முன்னணியில் உள்ள இந்தியாவின் ராணுவ தளங்களைத் தாக்க பாகிஸ்தான் ட்ரோன்கள், நீண்ட தூர ஆயுதங்கள், சுழன்று தாக்கும் வெடிமருந்துகள், ஜெட் விமானங்களைப் பயன்படுத்தியது." என தெரிவித்தார்.

இந்தியா பாக். மோதல்: நடப்பது என்ன? கடந்த ஏப்ரல் 22ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் 26 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். கொடூரமான இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த புதன்கிழமை நள்ளிரவில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானின் 9 தீவிரவாத முகாம்களை அழித்தது இந்திய ராணுவம். அதன் தொடர்ச்சியாக, இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டருகே உள்ள எல்லை கிராமங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் ஆகிய 4 எல்லை மாநிலங்களில் வியாழக் கிழமை இரவு 36 இடங்களை குறிவைத்து பாகிஸ்தான் ஏவிய 400க்கும் மேற்பட்ட துருக்கி தயாரிப்பு ட்ரோன்களை 'சுதர்சன சக்கரம்' (எஸ் 400) உள்ளிட்ட வான் பாதுகாப்பு ஆயுதங்களால் இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியது. அதன் பின்னரும், பாகிஸ்தானின் வான்வழித் தாக்குதல்களும், இந்தியாவின் பதிலடி தாக்குதல்களும் நீடிப்பது கவனிக்கத்தக்கது.





## சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலகத்தில் மண்டல குழு தலைவர் எஸ். ரவிச்சந்திரன் தலைமையில் கலந்து ஆலோசனை கூட்டம்

புழுதிவாக்கம், மே.11-

சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி 14 மண்டலம் குழு தலைவர், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர், பெருங்குடி, எஸ் .வி.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி கல்வி குழு தலைவர், 181வது வார்டு மாமன்ற உறுப்பினர் , பாலவாக்கம். விசுவநாதன் முன்னிலையில் அதிகாரிகள் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இதில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்து சென்னை பெருநகர மாநகராட்சி நடைபெற்ற வரும் பணிகளை தாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்குமாறு கலந்த ஆலோசனை கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



## தேமுதிக செயற்குழு உறுப்பினர் ஜெயக்குமார் சங்கீதா இல்ல நிகழ்ச்சியில் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பங்களிப்பு

அனகாபுத்தூர், மே.11-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூர் தனியார் திருமண மண்டபத்தில் தேமுதிக மாநில செயற்குழு உறுப்பினருமான ஜெயக்குமார் சங்கீதா அவர்களின் இல்ல நிகழ்ச்சியான பூ புனித விழா ஆகிய இரு குழந்தைகள் ஆன சந்தியா என்ற பிரவீனா. யாமினி. ஆகியோரின் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அனகை. முருகேசன் அவர்கள் தலைமையில் சிறப்பு அழைப்பாளராக தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் கலந்து கொண்ட போது அவர்களுக்கு வழியெங்கும் கழக கொடிகள் வண்ண பேனர்கள் அமைக்கப்பட்டு மேளதாளம் முழங்கி மகளிர் அணியினர் பூரண கும்பம் ஏந்தி மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டனர் பின்னர் கழக பொதுச் செயலாளர் அவர்கள் இரு குழந்தைகளுக்கு மலர் கொடுத்து வாழ்வாங்கு வாழ்த்தி சென்றனர் இந்நிகழ்ச்சியில் அனகை பகுதி கழக செயலாளர் மகாதேவன், மாவட்ட கேப்டன் மன்ற செயலாளர் எம்.ஜி.மூர்த்தி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, அனகாபுத்தூர் நகர மகளிர் அணி பி.மோகன தேவி மற்றும் மகளிர் அணியினர் நகரம் ஒன்றியம் ஆகிய கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



## பகுதி கழக செயலாளர் வின்சென்ட் சைலஜா இல்ல புது நன்மை விழாவில் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்பு

பம்மல், மே.11-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் சி.எஸ்.ஐ. கன்வென்ஷன் வளாகத்தில் தேமுதிக பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் வின்சென்ட் சைலஜா அவர்களின் இல்ல புது நன்மை விழா செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினருமான அனகை முருகேசன் அவர்கள் தலைமையில் வின்சென்ட் சைலஜா அவர்களின் இரு குழந்தைகள் ஆன மேனியில் மெக்காலம் என்ற ரித்திக். விஜயராஜ் என்ற ஆண்டனி அவர்களை வாழ்த்த சிறப்பு அழைப்பாளராக தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் வருக தந்த போது மேளதாளம் முழங்க பட்டாசுகள் வெடிக்கப்பட்டு தீப்பந்தங்கள் சூழற்றப்பட்டு மகளிர்கள் கழக கொடி ஏந்தி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டு பின்னர். இரு குழந்தைகளையும் மலர் கொத்து கொடுத்து வாழ்வாங்கு வாழ்த்தினர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பம்மல் ராஜ், மாவட்ட கேப்டன் மன்ற செயலாளர் எம்.ஜி.மூர்த்தி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, பகுதி செயலாளர் கேட் எம்.தர்மா, கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்தி சென்றனர்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் காவல்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை ஆகியவைகளின் சார்பில் பள்ளி வாகனங்களில் கூட்டாய்வு மேற்கொண்டார்



சிவகங்கை, மே.11-

சிவகங்கை மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக விளையாட்டு மைதானத்தில் காவல்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை ஆகியவைகளின் சார்பில் பள்ளி வாகனங்களில் கூட்டாய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டத்தில் பள்ளி குழந்தைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் சரியான முறையில் உள்ளதா என்பது குறித்து போக்குவரத்துத்துறை, காவல்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை ஆகிய துறைகளின் சார்பில் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், வாகனத்தின் நிறம், பள்ளி பற்றிய விபரம், தொடர்பு எண்கள், பிரதிபலிப்பான் பட்டைகள், பிரேக் திறன், உருளைப்பட்டைகளின் நிலை, அவசரக்கதவின் இயக்க நிலை, வாகனத்தின் கதவுகள் இயக்க நிலை, வாகனத்தின் இருக்கை நிலை, வாகனத்தின் படிக்கட்டுகள், வாகன ஓட்டுநரின் இருக்கை, வாகனத்தின் உட்புறம், தரைப்பலகை, ஜன்னல்கள், சிவப்பு மற்றும் வெள்ளை பிரதிபலிப்பான், நாடாக்கள், முதலுதவிப் பெட்டி மற்றும் மருந்துகள், தீயணைக்கும் கருவி மற்றும் வேகக்கட்டுப்பாட்டு கருவி ஆகியவற்றின் நிலை குறித்து கூட்டாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், இதில் குறைபாடுகள் கண்டறியப்படும் வாகனங்களில் குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் ஆய்விற்கு சமர்ப்பித்து, சான்றுகள் பெற்ற பின்புதான் பள்ளிக்குழந்தைகளை ஏற்றிச் செல்ல வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட அறிவுறுத்தப் பட்டுள்ளது.

வாகன ஓட்டுநர்கள் வாகனத்தினை இயக்குவதற்கு முன்னர் வாகனத்தினை முறையாக பரிசோதனை செய்த பின்னரே இயக்கிட வேண்டும். வாகன ஓட்டுநர்கள் வாகனம் ஓட்டும் போது முழு கவனத்துடன் வாகனத்தை இயக்குவதோடு, அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமான வேகத்தில் இயக்கக் கூடாது. வாகனம் இயக்கும் போது, மது அருந்துதல், கைபேசியை உபயோகித்தல் உள்ளிட்ட செயல்முறைகள் முற்றிலும் இருத்தல் கூடாது. எதிரில் வாகனம் எதுவும் வரவில்லை என உறுதி செய்த பின்னரே, பிற வாகனத்தினை கடந்து செல்ல முயற்சிக்க வேண்டும்.

வாகனத்தில் விதிமுறைகளின்படி குறிப்பிடப்பட்டுள்ள குழந்தைகளை மட்டுமே ஏற்றிட வேண்டும். குழந்தைகள் வாகனத்தில் ஏறும் பொழுதும், இறங்கும் பொழுதும் அதனை கவனித்து நிதானமாக வாகனத்தினை இயக்கிட வேண்டும். வாகன ஓட்டுநர்கள் தீயணைப்பது குறித்த பயிற்சியினையும், முதலுதவி வழங்குவது குறித்த பயிற்சியினையும் பெற்றிட ஏதுவாக அதற்கான பயிற்சியும் இந்நிகழ்வின் வாயிலாக வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தவிர, அனைத்து பள்ளி வாகன ஓட்டுநர்களுக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மூலம் பாதுகாப்பான முறையில் வாகனத்தை இயக்குவது குறித்த சிறப்பு பயிற்சிகளும் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவல கத்தின் கீழ் உள்ள சிவகங்கை, இளையான்குடி, காளையார்கோவில், மானாமதுரை, திருப்புவனம், சிங்கம்புணரி, திருப்பத்தூர் ஆகிய 7 வட்டாரங்களுக்குட்பட்ட 60 பள்ளிகளைச் சார்ந்த 286 பள்ளி வாகனங்கள் மற்றும் காரைக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் கீழ் உள்ள காரைக்குடி மற்றும் தேவகோட்டை ஆகிய 2 வட்டாரங்களுக்குட்பட்ட 35 பள்ளிகளைச் சார்ந்த 268 பள்ளி வாகனங்கள் என மொத்தம் 95 பள்ளிகளைச் சார்ந்த 554 பள்ளி வாகனங்கள் மாவட்டத்தில் உள்ளன.

அதில் சிவகங்கை வட்டாரங்களைச் சார்ந்த 220 வாகனங்களும் மற்றும் காரைக்குடி வட்டாரங்களைச் சார்ந்த 185 வாகனங்களும் என மொத்தம் 405 வாகனங்களில் இன்றையதினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், சிவகங்கை வட்டாரங்களைச் சார்ந்த 12 வாகனங்களும், காரைக்குடி வட்டாரங்களைச் சார்ந்த 14 வாகனங்கள் என மொத்தம் 26 வாகனங்கள் குறைபாடுகள் காரணமாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பராமரிப்பு பணியில் உள்ள சில வாகனங்கள் , பராமரிப்பு பணிகள் முடிவுற்ற பின், ஆய்விற்கு முறையாக உட்படுத்தப்பட்டு, பின்னர் சான்றுகள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, சிவகங்கை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அமல அட்வின் அவர்கள், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கருப்பனன் மற்றும் காவல்துறை, பள்ளிக்கல்வித்துறையை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பள்ளி வாகனங்களின் ஓட்டுநர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## தில்லை குழுமத்தின் நிறுவனத் தலைவர் தொழிலதிபர் டாக்டர்.எஸ்.தேவராஜ் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி முன்னிட்டு 3000பேர்க்கு அன்னதானம்

தாம்பரம், மே.11-

செங்கல்பட்டு மாவட்ட மாணவரணி இணை செயலாளர் தாம்பரம் டி.தில்லைராஜ் அவர்களின் தந்தை தாம்பரம் தில்லை குழுமத்தின் நிறுவனத் தலைவர் தொழிலதிபர் டாக்டர்.எஸ்.தேவராஜ் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலியை முன்னிட்டு மேற்கு தாம்பரம் சண்முகம் ரோடு தில்லை காம்ப்ளக்ஸ் அருகில் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி பின்னர் 3000பேர்க்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, தாம்பரம் மத்திய பகுதி கழக செயலாளர் எல்லார்செழியன், தாம்பரம் கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.கூத்தன், மேற்கு பகுதி செயலாளர் கோபிநாத், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் வேலு, திரைப்பட இயக்குனர் மற்றும் நடிகருமான நட்ராஜ் தேவ் மற்றும் தாம்பரம் மாநகர பகுதி கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## உதகையில் ரோஜா கண்காட்சி தொடங்கியது

உதகை, மே.11-

உதகை அரசு ரோஜா பூங்காவில் 20வது ரோஜா கண்காட்சியை அரசு கொறடா ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். ரோஜா கண்காட்சி 3 நாட்கள் நடைபெற உள்ள நிலையில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.





## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி, கே.பழனிச்சாமி, மே 12 ல் பிறந்த நாளை முன்னிட்டு 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

பள்ளிக்கரணை, மே. 11-

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் 09.05.2025 அன்று வெள்ளிக்கிழமை மாலை 3:30 மணிக்கு ஸ்ரீ நீலாம்பாள் திருமண மண்டபத்தில் மே 12 ல் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி, கே. பழனிச்சாமி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஸ்ரீ நீலாம்பாள் திருமண மண்டபத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. சென்னை புறநகர் மாவட்ட செயலாளர், கே. பி .கந்தன் அவர்களின் முன்னிலையில் விழா துவக்கி வைக்கப்பட்டது. 189 வது வட்டம், சென்னை புறநகர் மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர், சி. ஆர். சூரியபிரபா தலைமையில் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாற்றுத்திறனாளிக்கு மிதிவண்டி, மகளிர்களுக்கு தையல் மிஷின்கள், 3000 மகளிருக்கு பக்கெட்டுகள் வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர். விழாவில் மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். இவ்விழாவில் அனைவருக்கும் அருஞ்சுவை உணவு 3000 திற்கும் மேற்பட்டோருக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது.



## வேலூர் செல்லியம்மன் கோயிலில் பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஒழித்து, இந்திய அனைத்து படை ராணுவம் அமைதி நிலவ, அ.தி.மு.க. சிறப்பு பிராத்தனை

வேலூர், மே.11-

வேலூர் மாவட்டம், வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகே, செல்லி அம்மன் கோயிலில், பாகிஸ்தான் தீவிரவாதம் ஒழிய, அனைத்து படை இந்திய இராணுவ வீரர்களுக்கும், இராணுவ தளங்களுக்கும் எந்தவித சேதமும் இன்றி வெற்றிகரமாக தீவிரவாதத்தை ஒழித்து அமைதி நிலவ, வேண்டி சிறப்பு பிரார்த்தனை வேலூர் மாவட்ட அதிமுக மாநகர செய லாளர் எஸ்.ஆர்.கே. அப்பு தலைமையில் நடைபெற்றது. இந்த சிறப்பு பிரார்த்தனையில் அதிமுகவினர் மற்றும் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு பிரார்த்தனைகளை மேற்கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161